



அகில இந்திய அளவில் UPSC தேர்வில் "நான் முதல்வன்" திட்டத்தில் பயிற்சி பெற்று இந்திய அளவில் 197வது இடமும் தமிழ்நாடு அளவில் 6வது இடம் பிடித்த திருக்கோவிலூர் நகரத்தை சேர்ந்த M.S.சேஷன் வெற்றி பெற்றார். அவரை கழக துணைப் பொதுச்செயலாளர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ வாழ்த்தினார். மாவட்ட துணைச் செயலாளர் டி.என். முருகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் T. செல்வராஜ், நகர செயலாளர் கோபிகிருஷ்ணன், நகர மன்ற துணை தலைவர் குணா மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.




கடலூர் மேற்கு மாவட்டம் நல்லூர் வடக்கு ஒன்றியம் பூலாம்பாடியில் ஒன்றிய துணை செயலாளர் டி. அண்ணாதுரை நிகழ்ச்சி ஏற்பாட்டில் கழக தலைவர் முதலமைச்சர் மு. க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு பொது மக்களுக்கு அறுசுவை உணவு மற்றும் புடவை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சி.வெ.க. வெங்கடேசன் வழங்கினார். உடன் எஸ். இராமு, குரு சரஸ்வதி. அன்புகுமரன், குணா, தனசேகரன், ரகு, எம்.காமராஜ், முத்துக்கருப்பன், ஜெ.ரமேஷ் உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.

### CCRS பாதுகாப்பு சான்றிதழ் வழங்கி

# வேளச்சேரி - புனித தோமையார் மலை MRTS ரயில் சேவையை உடனடியாக தொடங்க வேண்டும்!

## ஒன்றிய ரயில்வே – சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர்களுக்கு தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. கடிதம்!

சென்னை, மார்ச் 11 –

தென் சென்னை மக்களின் நீண்டநாள் கோரிக்கையாக உள்ள வேளச்சேரி – புனித தோமையார் மலை MRTS நீட்டிப்பு பாதையை விரைவில் இயக்கத்தில் கொண்டு வர வேண்டும் என்ற கோரிக்கையுடன் இன்று ஒன்றிய ரயில்வே அமைச்சர் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர்களுக்கு தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர்.தமிழச்சி தங்கபாண்டியன் கடிதம் எழுதியுள்ளார்.



சுமார் 5 கிலோமீட்டர் நீளமுடைய வேளச்சேரி – புனித தோமையார் மலை MRTS ரயில் பாதை கடந்த நீண்ட நாட்களாக தாமதமடைந்து வருகிறது. 2019ஆம் ஆண்டு தென் சென்னை மக்களவை உறுப்பினராக பொறுப்பேற்றதிலிருந்து, இந்த திட்டத்தை விரைவுபடுத்து வதற்காக மக்களவையில் விவாதங்கள், விதி 377 கீழ் சிறப்பு குறிப்புகள், அமைச்சகத்துக்கு கடிதங்கள் உள்ளிட்ட பல்வேறு முயற்சி களை தொடர்ந்து தமிழச்சி தங்கபாண்டியன் மேற்கொண்டு வருவதாகவும்.

தற்போது இந்த பாதைக்கான கட்டமைப்பு பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில், Chief Commissioner of Railway Safety (CCRS) அவர்களின் பாதுகாப்பு சான்றிதழ் வழங்கப்படாததால் இன்னும் இயக்கத்தில் வராமல் தாமதமாகி வருவது கவலைக்குரியது.

வேளச்சேரி – புனித தோமையார் மலை இணைப்பு தொடங்கப்பட்டால், MRTS, சென்னை மெட்ரோ மற்றும் தெற்கு ரயில்வே புறநகர் ரயில் சேவைகள் ஒரே இடத்தில் இணையும் முக்கிய போக்குவரத்து மையமாக புனித தோமையார் மலை உருவாகும். இதனால் தென் சென்னை பகுதியின் போக்குவரத்து நெரிசல் குறையும் மற்றும் ஆயிரக்கணக்கான பயணிகள் தினசரி பயனடைவார்கள்.

எனவே, பாதுகாப்பு ஆய்வு மற்றும் சான்றிதழ் வழங்கும் செயல்முறையை விரைவுபடுத்தி வேளச்சேரி – புனித தோமையார் மலை MRTS சேவையை உடனடியாக தொடங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

தென் சென்னை மக்களின் நீண்டநாள் எதிர்பார்ப்பான இந்த முக்கிய போக்குவரத்து திட்டம் விரைவில் செயல்பாட்டிற்கு வரும் என நம்புவதாகவும் கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பல ஆண்டுகளாக நிலுவையிலிருந்த வேளச்சேரி புனித தோமையார் மலை பறக்கும் ரயில் திட்ட பணிகளை விரைவுபடுத்த தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினராக தமிழச்சி தங்கபாண்டியனின் முன்னெடுப்பு:

1. 01.07.2019 அன்று மாண்புமிகு ஒன்றிய இரயில்வே துறை அமைச்சர் அவர்களைச் சந்தித்து பணிகளை விரைந்து முடிக்கக் கோரி கடிதம் வழங்கியுள்ளார்.

2. 01.09.2019 அன்று தென்னக ரயில்வே பொது மேலாளர் அவர்களுக்கு பணிகளை துரிதப் படுத்தக்கோரி கடிதம் வழங்கியுள்ளார்.

3. 12.03.2020 அன்று நாடாளுமன்ற மக்களவையில், ரயில்வே துறை விவாதத்தின் போது பணிகளை விரைந்து முடிக்கக் கோரி உரையாற்றியுள்ளார்

4. 11.11.2022 அன்று மீண்டும் ஒன்றிய இரயில்வே துறை அமைச்சருக்கு பணிகளை விரைந்து முடிக்கக் கோரி கடிதம் அனுப்பியுள்ளார்.

5. 08.12.2022 அன்று மக்களவையில் விதி எண் 377ன் கீழ் பணிகளை விரைந்து முடிக்கக் கோரி உரையாற்றியுள்ளார்.

6. 03.09.2023 அன்று மக்களவையில் விதி எண் 377ன் கீழ் பணிகளை விரைந்து முடிக்கக் கோரி வலியுறுத்தியுள்ளார்.

7. 2019 முதல் 2025 வரை நடைபெற்ற அனைத்து தெற்கு ரயில்வே ஆலோசனைக்குழு கூட்டங்களிலும், பணி குறித்த நிலையையும், துரிதமாக முடிக்கக்கோரியும் வலியுறுத்தியுள்ளார்.



கடலூர் கிழக்கு மாவட்டம்,கடலூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் தனஞ்செயன் தந்தையார் ராமானுஜம் அவர்களின் மறைவையொட்டி கடலூர் கிழக்கு மாவட்ட கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். கடலூர் மாநகர கழக செயலாளர் கே.எஸ்.ராஜா, தொகுதி பார்வையாளர் சுவை சுரேஷ், ஒன்றிய கழக செயலாளர்கள் ஆர்.காசிராஜன், P.சுப்ரமணியம், ஆர். விஜயசுந்தரம், பகுதி செயலாளர் இளையராஜா உள்ளிட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### தமிழ்நாட்டில் புதிய தேசிய தொழில்நுட்ப ஆசிரியர் பயிற்சி –

# ஆராய்ச்சி மையத்தை நிறுவும் எண்ணம் உள்ளதா?

## மக்களவையில் டி.எம்.கதிர்ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, மார்ச் 11 -

தமிழ்நாட்டில் புதிய தேசிய தொழில்நுட்ப ஆசிரியர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தை (NITTTRs) நிறுவும் எண்ணம் ஒன்றிய அரசுக்கு உள்ளதா? என மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் D.M.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

தமிழ்நாடு மாநிலத்தில் ஏதேனும் ஒரு புதிய தேசிய தொழில்நுட்ப ஆசிரியர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தை (NITTTRs) நிறுவும் எண்ணம் ஒன்றிய அரசுக்கு உள்ளதா?

அப்படியானால், அதன் விவரங்கள்; மற்றும்



அதற்கான உத்தேச இடம், நிறுவுவதற்கான காலக்கெடு மற்றும் அத்தகைய NITTTRS மையத்தை மேற்கூறிய மாநிலத்தில் அமைப்பதற்கு ஒதுக்கப்பட்ட நிதி விவரங்கள் என்ன? என மக்களவையில் அவர் கேள்வி எழுப்பினார்.

ஒன்றிய அரசின் கல்வி அமைச்சகத்தில் மாநில அமைச்சர் டாக்டர். சுகந்தா மஜூம்தார் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் கீழ்வருமாறு:

தேசிய தொழில்நுட்ப ஆசிரியர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (NITTTRs) போபால், சண்டிகர், சென்னை மற்றும் கொல்கத்தா ஆகிய இடங்களில் அமைந்துள்ள இந்திய அரசின் கல்வி அமைச்சகத்தின் (MoE) கீழ் உள்ள தன்னாட்சி நிறுவனங்களாகும். ஆசிரியர்களுக்கான பயிற்சி, பாடத்திட்ட மேம்பாடு மற்றும் தொடர்புடைய கல்வி ஆதரவு ஆகியவற்றிற்கான விரிவாக்க மையங்களையும் NITTTRகள் செயல்படுத்துகின்றன. தற்போது, NITTTR சென்னை, சென்னையிலுள்ள அதன் பிரதான வளாகம் மற்றும் பெங்களூரு, ஹைதராபாத், விஜயவாடா மற்றும் களமசேரி ஆகிய இடங்களில் அமைந்துள்ள விரிவாக்க மையங்கள் மூலம் தமிழ்நாடு மற்றும் அண்டை மாநிலங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறினார்.

### மேல்மலையனூர் கிழக்கு ஒன்றியத்தில் முதல்வர் பிறந்த நாள் விழா–

# 5000 நபர்களுக்கு அரிசி உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார்! நெடுஞ்செழியன் தலைமை!

செஞ்சி, மார்ச் 11 -

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்டமன்ற தொகுதி சார்பில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மேல்மலையனூர் கிழக்கு ஒன்றியம் வடவெட்டி, மேல்காரணை, கீழ் செவலாம்பாடி, கெங்கபுரம், சித்தேரி, சமத்தகுப்பம், தேவனூர் ஆகிய ஊராட்சியில் அரிசி உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார். மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் முன்னிலை வகித்தார். ஊராட்சி மன்ற தலைவர்கள் கெங்கபுரம் ராஜா, சித்தேரி சிவராமன், தேவனூர் சாந்தி சக்திவேல்அனைவரையும் வரவேற்றனர். நிகழ்ச்சியில்விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு சிறப்புரை யாற்றி வடவெட்டி, மேல் காரணை, கீழ் செவலாம்பாடி, கெங்கபுரம், சித்தேரி, சமத்தகுப்பம், தேவனூர்ஆகிய ஊராட்சிகளில் உள்ள 5000 நபர்களுக்கு அரிசி உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட கவுன்சிலர் செல்வி ராம சரவணன், ஒன்றிய அவைத் தலைவர் மண்ண ஏழுமலை,மாவட்ட பிரதிநிதி செந்தில்குமார், ஒன்றிய பொருளாளர் சரவணன், ஒன்றிய நிர்வாகிகள் எஸ்.பி. சம்பத்,தொண்டரணி ஆறுமுகம், ஊராட்சி கழக நிர்வாகிகள் வடவெட்டியாகவண்ணன், ஆனந்தன், பூங்காவனம், மீனாட்சி, மேல் காரனை தேசிங்கு, புண்ணிய கோட்டி, முனுசாமி, கீழ் செவலாம்பாடிஜானகிராமன், தாமோதரன், வடமலை, வேல்முருகன் , மோகன், தேவராஜ், சின்னதுரை, கெங்கபுரம் சேட்டு, நெல்சன், தருண், சித்தேரி காந்தி, தாமோதரன், பூங்காவனம் ,பழனி, சமத்தகுப்பம் தமிழ்வாணன், தேவனூர்அண்ணாமலை, கார்த்தி, தயாநிதி ,தேவராஜ், காளிதாஸ், கோபி உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# சுவாமிமலை முருகன் கோவிலில் புதிதாக 2 மின் தூக்கிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார்!

தஞ்சாவூர், மார்ச் 11-

கும்பகோணம் அருகே, பாபநாசம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, சுவாமிமலையில் உள்ள முருகப் பெருமானின் அறுபடை வீடுகளில் நான்காம் படைவீடான சுவாமிநாத சுவாமி கோயிலில் முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள், நோயாளிகள் மற்றும் பக்தர்கள் கோவிலின் மேற்பகுதிக்கு சிரமம் இன்றி செல்லும் வசதிக்காக மின் தூக்கி (லிஃப்ட்) வசதி ஏற்படுத்த வேண்டும் என பாபநாசம் எம்எல்ஏ ஜவாஹிருல்லா கடந்த 2022ம் ஆண்டு ஏப்ரல் 12ம் தேதி சட்டப்பேரவையில் கோரிக்கை விடுத்தார். இதையடுத்து தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு பரிந்துரையின்பேரில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சுவாமிமலை சுவாமிநாத சுவாமி திருக்கோவிலில் முதியோர்களும், மாற்றுத்திறனாளிகளும் சென்று முருகப்பெருமானை தரிசனம் செய்ய வசதியாக லிஃப்ட் வசதி ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொண்டார்.

தொடர்ந்து கடந்த2024ம் அரசாணை பிறப்பிக்கப்பட்டு பிப்ரவரி 17ம் தேதி சுவாமிமலை கோயிலில் ஈசானிய மூலையில் ரூ.3.55 கோடி மதிப்பில், ஒரே நேரத்தில் 884 கிலோ எடை தாங்கும், 13 பேர் வரை செல்லும் வகையில் நவீன வசதிகளுடன் தலா 2 மின் தூக்கிகளை அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டது.

விழாவில் தமிழ்நாடு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், தஞ்சாவூர் வடக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் சாக்கோட்டை அன்பழகன் எம்.எல்.ஏ மற்றும் பாபநாசம் எம்எல்ஏ ஜவா ஹிருல்லா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சுவாமிமலை பேரூராட்சி தலைவர் வைஜெயந்தி சிவக்குமார் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக தமிழ்நாடு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு பங்கேற்று 2 மின் தூக்கியை திறந்த வைத்து, கூடுதலாக 869 சதுர அடியில் 50 நபர்கள் அமரக்கூடிய பக்தர்கள் காத்திருப்பு அறையும், ஆண்கள் மற்றும் பெண்களுக்கு என சுகாதாரமான முறையில் தலா இரண்டு கழிப்பறைகளும் அமைக்கப்பட்டுள்ள பகுதியையும் ஆய்வு செய்தார்.

இந்நிகழ்ச்சியில் கும்பகோணம் மாநகர திமுக செயலாளர் சு.ப.தமிழழகன், அரசு வழக்கறிஞர் பா.விஜயகுமார், சுவாமிமலை பேரூர் திமுக செயலாளர் பாலசுப்பிரமணியன், துணை செயலாளர் கோபால், இந்து சமய அறநிலையத்துறை மயிலாடுதுறை இணை ஆணையர் சிவக்குமார், கும்பகோணம் துணை ஆணையர் உமாதேவி, தக்கார் சுவாமிநாதன் மற்றும் கட்சி நிர்வாகிகள், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தியாகி தாளமுத்து (நடராஜன்)

**மார்ச் 11 (1939)**



குடந்தையிலிருந்து குமுறும் உணர்ச்சியோடு சென்னை வந்து 13.9.1938 காலை இந்து தியாலாஜிகல் உயர்நிலைப் பள்ளி முன்பு கட்டாய இந்தி ஒழிக! ஆரிய இந்தி ஒழிக! தமிழ் வாழ்க!"என முழக்கமிட்டு மறியலில் கலந்து கொண்டு கைதானார்.

ஜார்ஜ் டவுன் போலீஸ் கோர்ட் நீதிபதி "இப்படியே விட்டுவிட்டால் ஊருக்கு போய்விடுகிறீர்களா?" என்று கேட்டு மூச்சு இழுப்பதற்குள் விடை வந்தது தாளமுத்துவின் திருவாயிலிருந்து "இல்லை, முடியாது" என்பதாக. "நாலு மாத கடின காவல் தண்டனை விதிக்கிறேன்" என தீர்ப்பளித்தார் நீதிபதி.

சிறையில் கடுமையான வயிற்று போக்கு காரணமாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சிறைச்சாலையில் இறந்துபோன தாளமுத்துவும், நடராஜனும்தான் இந்தி எதிர்ப்பு போரின் முதல் களப்பலிகள்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ச.த.ராதா

**மார்ச் 11 (2017)**



இளமை காலத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

சோளிங்கர் பேரூரில் வட்டச் செயலாளராகவும், பேரூர் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

சோளிங்கர் நகர கூட்டுறவு சங்கத் தலைவராக பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**